

# ஸ்ரீ சிவபாலயோகி மகராஜ்

# தலைவரின் ஆசிச் செய்தி

இருபது ஆண்டுகளுக்குமுன் மலையகத்தில் ஓர் ஆன்மீக ஆஸ்ரமம் அமைக்கவேண்டுமென்ற எண்ணம் என்னில் தோன்றியது. எனது எண்ணம் நிறைவேறி மக்களுக்கு ஆன்மீக சேவை செய்ய அன்னை ஸ்ரீ காயத்ரீ தேவியை உபாசித்து வந்தேன். உபாசனையின் பலனாய் பாரத நாட்டில் இமயம் முதல் குமரிவரை செய்த யாத்திரையில் ஜீவன் முக்தர்கள், சித்தர்கள் காடு பனிமலை வாழ் கடுந் தபஸ்விகளின் தொடர்பு கிட்டி. அவர்களின் பரிபூரண அன்பு, ஆசியுடன். இலங்கையில், நுரலை மாநகரில் ஓர் ஆஸ்ரமம் அமைக்கப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆன்மீகத் தொண்டு ஆற்றிவருகிறது.

இந்த ஆஸ்ரமத்தை வந்து ஆசீர்வதிக்கும்படி அடியேன் வேண்டிக்கொண்டதற்கிணங்க, ஸ்ரீ சிவபாலயோகி மகராஜ் அவர்கள் அக்டோபர் மீ 12ம் திகதி நுரலை வந்து, சுவாமிகளால் புனித நர்மதா நதியில் கண்டெடுத்த சிவலிங்கத்தை ஆஸ்ரமத்தில் ஸ்தானம் செய்து, ஆஸ்ரமத்தையும், இலங்கை மக்களையும் ஆசீர்வதிக்க இருக்கிறார்கள். சுவாமிகள் இலங்கை வருவது இது மூன்றாவது தடவையாகும்.

நுரலையில் சுவாமிகளால் ஸ்தாபிக்கப்படவிருக்கும் சிவலிங்கத்தை சர்வமதத்தவர்களும் வணங்கி அருள்பெற வேண்டுமென்பது சுவாமிகளின் விருப்பம். இதனால் இந்த சிவலிங்கத்திற்கு "ஸ்ரீ லங்காதீஸ்வரன்" என்ற நாமத்தைச் சூட்டியுள்ளார். ஸ்ரீ லங்காதீஸ்வரன் அருள்கிட்டி எல்லோரும் இன்புற்று வாழ்வோமாக.

இந்த புனித கைங்கரியத்தை நிறைவேற்றிவைக்க இலங்கை வரும் மகா தபஸ்வி ஸ்ரீ சிவபாலயோகியாரின் வாழ்க்கைச் சரிதத்தைச் சிறு புத்தகமாக வெளியிடுகிறோம். இதன்மூலம் சுவாமிகளின் தபோ சக்தியை மக்கள் உணர்ந்து அவரை வணங்கி அருள்வாழ்வு வாழ்வார்களாக.

ஓம் சாந்தி

ஆர். கே. முருகேசு

ஸ்ரீ லங்காதீஸ்வர தியான மந்திரம்,
82, லேடி மெக்கலம்ஸ் டிரைவ், நுரலை.

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

# ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சிவ பாலயோகி மகராஜ்

# வாழ்க்கை வரலாறு

"சான்ருேர் கவியெனக்கிடந்த கோதாவரி" என்பது கம்பன் கண்ட கோதாவரியாகும். இத்தகைய கோதாவரி பாயப் பெற்றதனுல் ஆந்திர தேசத்தில் கோதாவரீ ஜில்லா என்ெருரு பிரதேசம் உண்டு அங்குத் திராக்ஷரமா என்பது பெயர் பெற்ற புண்ணிய தலம். புராணகாரர்கள் இதனைத் தக்ஷாவதி எனக் குறிப்பிடுவார்.

தக்கன் சிவபெருமானுக்கு மாருக யாகம் செய்தான் அதனுல் தக்கன் என்ற பெயரையும் பெருமையையும் இழந்தான். உமாதேவியார் தான் தக்கனுக்கு மகளாக இருப்பது சிவத்துரோகம் என எண்ணினுர். உடனே தன்னைத் தீயிலிட்டுக்கொண்டார். அந்த இடமே தக்ஷாவதி என வழங்குகிறது.

திராக்ஷரமான ஒரு சிறு கிராமம். வியாச முனிவர் கடுந்தவசு செய்து தவசித்தி பெற்ற இடம் என்பது கர்ண பரம்பரைக் கதையாகும். இங்கிருந்து ஒரு மைல் தூரத்தில் ஆதிவராபுப் பேட்டா என்ற சிற்றூர் இருக்கிறது. இங்கு தான் ஸ்ரீ சிவபாலயோகியாரின் அவதாரம் நிகழ்ந்தது.

இந்தக் கிராமத்தில் பெரும்பாலான மக்கள் தேவாங்க குலத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களிற் சிலர் சிவலிங்க தாரிகள். தொழில் முறையில் கைக்கோளர்கள். கவர்ச்சிகரமான சேலைகளையும், வேஷ்டிகளையும் நெய்து பக்கத்துப் பட்டணங்களில் விற்று ஜீவனம் நடத்தி வந்தார்கள். குழந்தைகள் காலையில் பெற்ருேருடன் நெசவுவேலை செய்து விட்டு பிற்பகல் மட்டும்தான் பள்ளி செல்ல முடிந்தது.

இந்தக் கிராமத்தில் பீமண்ணு ஒரு ஏழைத் தொழிலாளி. அவருக்கு இருமனைவியர்கள். ஒருவர் சுவர்ணம்மா.

மற்றவர் பார்வதம்மா. பார்வதம்மாவிற்கு இரண்டு ஆண் குழந்தைகள். இரண்டாவது பிள்ளை ஸத்யராஜு, 1935ம் வருடம் ஜனவரி மீ 24ம் திக்தி வியாழக்கிழமை பி, ப 2-45 மணிக்கு கிருஷ்ணபக்ஷ் பஞ்சமித் திதி உத்தர நட்சத்திரத்தில் பிறந்தார். இவரே நமது ஸ்ரீ சிவபால யோகி மகராஜ் அவர்களாவர்

சுவர்ணம்மாவிற்குச் சத்தியராசுவின் மேல் ஓர் அலாதிப் பிரியம். சத்தியரார்சுவின் தேவைகளையெல்லாம் சுவர்ணம்மாவே கவனிக்கத் தொடங்கினாள், பீமண்ணாவின் திடீர் மரணத்தினால் இல்லக்கிழத்திகள் இருவரும் பிரிந்துவாழ நேரிட்டது.

# பிள்ளைப் பருவம்

பர்வதம்மாளின் தகப்பனாராகிய கோலி சத்தியம் சாதாரண நெசவுத் தொழிலாளர். பெண்ணையும் பேரப் பிள்ளைகளையும் காப்பாற்றுவது பெரும் பிரயத்தனமாக இருந்தது.

சத்தியராசுவுக்கு ஐந்து வயது நடக்கும் போது சுவர் ணம்மா அவரைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று வளர்த்து வந்தாள். ஆறு மாதங் கழிந்து மகனைப் பார்க்கத் தாய் வந்தபோது தாயுடனேயே செல்லவேண்டு மென்று சிறுவன் பிடிவாதமாக இருந்தான். சிறுவனைத் தாய் அழைத்துச் செல்வதைத் தவிர வேறு வழி இல்லாது சுவர் ணம்மாள் ஒப்புக்கொண்டார்.

சத்தியராசு தாய் வீடு சென்றதும் ஆதிவாரபுப் பேட் டாவில் பள்ளியில் சேர்க்கப்பட்டான். குடும்பம் ஏழ்மை நிலையிலிருந்ததால் அதிகாலையிலேயே சத்தியராசு நித்திரை விட்டெழுந்து காலை 10 மணி வரை நெசவுத் தொழிலில் வீட்டிலுள்ள பெரியவர்களுக்கு உதவி செய்வான். மாலை 5 மணிக்கு வீடு திரும்பியதும் மறுபடியும் உதவி செய்வான், மாலை 6 மணிக்கு வெளியே தோழர்களுடன் விளையாடச் சென்று இரவு 9 மணிக்குத் திரும்புவான் இதுதான் சத்திய ராசுவின் தினசரி வாழ்க்கையாகும்.

சத்தியராசு சுறுசுறுப்பும் புத்திசாலித்தனமும் உள்ளவன் படிப்பு, தொழில், விளையாட்டு எல்லாவற்றிலுமே தனது திறமையை வெளிப்படுத்தினன். பாட்டனர் கோலிசத்தியம் ஏழ்மை நிறைந்தவரே தவிர, தன்மானம் நிறைந்த கௌரவ மான மனிதர்.

பாட்டனர் அபின் உபயோகிக்கும் பழக்கம் உடைய வர். அபினியைச் சாதாரண கடைகளில் பெற்றுக்கொள்ள முடியாது. ஆறு மைல் தூரத்தில் உள்ள இராமச்சந்திர புரத்தில்தான் பெற்றுக்கொள்ள முடியும். எட்டு வயதான சத்தியராசு ஒருமுறை அபின்வாங்கி வரவேண்டிய சந்தர்ப் பம் ஏற்பட்டது. அபின் வாங்கித் திரும்பும் போது இருட்டி விட்டது, சத்தியராசு பூட்டியிருந்த கடைத்திண்ணையில் படுத்து இராபொழுதைக் கழித்த பின் விடிய வந்துசேர்ந் தான், பாட்டனர் பேரனின் தைரியத்தை மிகமெச்சிப் பாராட்டினர்.

# பாட்டனாரின் உபதேசம்

பாட்டனார் சத்தியராசுவைத் தன உயிருக்கு உயிராக நேசித்தார். சத்தியராசு இரவு விளையாட்டு முடிந்து வீடு வந்ததும் பாட்டனாரிடம் அன்றாட நடந்த விஷயங்கள் பற்றி ஒன்றும் தப்பாது சொல்லுவான் தாத்தாவும் மிகச் சிரத்தையோடு கேட்பார். பெரியவருக்கும் பேரனுக்குமிடையில் காரசாரமான விவாதங்கள் நடைபெறும் தாத்தா சொல்லும் புத்திமதிகளை ஏற்று அதன்படி நடப்பான். பாட்டனாரின் உயர்ந்த மனப்பண்பு பேரனிடம் மனதில் ஊறிவளர்ந்தது.

"வறுமை கொடுமையானதுதான்; துரதிர்ஷ்டமானதுதான். அருணகிரியார் 'மிடியென ஒரு பாவி' என்று வருணிப்பார். வறுமை ஒரு பாவம் அல்ல. அதைக்கண்டு வெட்கப்பட வேண்டியதில்லை. தன்மானம் நிறைந்த மனிதன் மற்றவரிடம் பிச்சை ஏற்கமாட்டான். பிறரிடம் கடன்படாமல் கௌரவமாக்வே வாழ முயல்வான். நேர்மையான வழி கடினமானதும்தான். இதுவே ஏற்றவழி. பொய்மையும் கபடமும் தீங்கு விளைக்கும்."

இவைதான் கிழவரின் புத்திமதி. சிறுவன் இவைகளை முற்றிலும் ஏற்றுக்கொண்டான். சத்தியராசுவுக்குப் பாட்டனாரின் பெருமதிப்பு அவரை உள்ளத்தால் நேசித்தான். அவருக்காக எதுவும் செய்யத்தயாராயிருந்தான்.



ஸ்ரீ சிவபாலயோகி மஹராஜ்
Shri Sivabalayogi Maharaj
ශ්‍රී ශිවබාලයෝගි මහාරාජ්

# சத்தியராசுவின் நேர்மை

சத்தியராசுவுக்கு 8 வயதானபோது சுவர்ணம்மா மறுபடியும் வந்து பையனைத் தன் ஊருக்கு அழைத்துச் சென்று அங்குள்ள பள்ளியில் சேர்த்தாள் பள்ளியில் தோழர் கூட்டம் ஒன்று சேர்ந்தது, தோழர்களுக்கெல்லாம் அவன் தலைவனாக விளங்கினான். படிப்பில் அவ்வளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. சுவர்ணம்மா அபின் வியாபாரம் செய்து வந்தார். அவரிடம் 40 தோலா கள்ள அபின் இருந்தது. எப்படியோ இது அதிகாரிகளுக்குத் தெரிந்து விட்டது. அதனால் பெரும் கஷ்டம் அடைந்தார். சத்தியராசுவுக்கு இது முறையற்றதாகப்பட்டது. நேர்மைதான் முக்கியம் என்று பையன் வாதாடினான். கள்ள வியாபாரத்தில் ஈடுபட்டு தகாதவழியில் பணம் சேர்க்க முற்படுவதைத் தீவிரமாகக் கண்டித்தான், சுவர்ணம்மாவுடன் வாழ விரும்பாத அவர் சம்மதததுடனேயே பாட்டனாரிடம் திரும்பவும் சென்றான்.

கிராமம் திரும்பிய பையன் இப்பொழுது பள்ளியில் சேரவில்லை. இளைஞர் காங்கிரஸ் இயக்கம் தீவிரம் அடைந்து வந்த காலம் அது. சத்தியராசு அதில் பெரும் பங்கு கொண்டான். தோழர்கள் அவனையே தலைவனாகக் கொண்டார்கள். அவனுடைய தைரியத்திற்கும், புத்திசாலித்தனத்திற்கும், ஆர்வத்திற்கும், தியாக உணர்ச்சிக்கும் கிராமத்தில் பெருமதிப்பு இருந்தது.

சத்தியராசுவுக்கு 12 வயதாயிருந்தபோது சுவர்ணம்மா கடுமையான நோய்வாய்ப்பட்டாள், தனது கடைசிக்காலத்தில் தனது வளர்ப்புக் குழந்தை தன்னருகில் இருக்க வேண்டும் எனப்பெரிதும் விரும்பினாள். சத்தியராசு மறுபடியும் சுவர்னம்மாளுடன் வந்து வசிக்கத் தொடங்கினான். சுவர்ணம்மா நோய் குணமானதும் பழையபடி அவள் வியாபாரத்தை ஆரம்பித்துவிட்டாள் சிறுவனுக்குப் பயந்தே வியாபாரம் நடந்தது. சிறுவனுக்கு முன்கோபமும் இருந்தது. எந்தப்பாடுபட்டும் தன் கருத்தை மாற்றிக்கொள்ள மாட்டான், மாற்றுந்தாய்க்கு மன நிம்மதி இல்லாமல் போய்விட்டது, சத்தியராசுவை ஏன் தன்னுடன் வந்திருக்கச் சொன்னோம் என்று வருந்தினாள். இதற்காகச் சிறுவன் மாற்றுந்தாயின் வழிகளைச் சரியென்று ஒப்புக்கொள்ளவும் தயாராயில்லை. சிறுவன் மறுபடியும் சொந்த ஊர் திரும்பினான்.

# வறுமை

இம்முறை சொந்த ஊருக்கு வந்தபோது இனிமேல் மாற்ருந்தாயிடம் செல்வதில்லை என்ற பிடிவாதத்துடனேயே வந்தான். ஏழைப் பெற்றோர்களுக்கு தன் கடமையை ஆற்றும் பொருட்டு தினமும் பல மணி நேரம் அயராது தறிக்ளில் நெய்தான், கோவிசத்தியம். தனது பேரன் இந்த இளம் வயதில் அதிக உழைப்பு உழைத்து உடல் இளைத்துவிடக் கூடாது என்று பேரனை கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார். யாரும் அறியமால் கடின உழைப்பு உழைத்து கையில் மீதியானதை தாயிடம் கொடுத்து மகிழுவார். வெயிற்காலங்களில் நெசவு நேரம் போக ஒழிந்தவேளைகளில் குளிர்பானம் விற்றுச் சம்பாதித்தார். தன்தாயை ஏழ்மையிலிருந்து கரையேற்றிவிட வேண்டுமென்று அல்லும் பகலும் துடியாய்த் துடித்தார். கோவிசத்தியம், சத்தியராசுவினுல் தான் குடும்பம் வளம் பெறப் போகிறது என்று நம்பத் தலைப்பட்டார்.

நெசவுத் தொழிலில் பாடுபடுவதற்கு ஏற்ற கூலி கிடைக்கவில்லை இதனுல் வாழ்க்கைத்தரம் உயராது என்பதைச் சத்தியராசு உணர்ந்தார். 25 ரூபாய் முதலீடு கொண்டு தனது நண்பன் ஒருவன் பீடிக்கடை வைத்து நல்ல உயர்ந்த நிலையில் இருப்பதை அறிந்த காலந்தொட்டு சத்தியராசுவுக்குத் தானும் ஒரு பீடிக்கடை முதலாளியாக வேண்டும் என்று நீண்ட நாள் ஆசை இருந்து வந்தது. அந்த ஆசை இப்போது வெளிப்பட்டது. பாட்டனுரிடம் தன் கருத்தை வெளியிட்டான். கிழவனுக்கு இந்த எண்ணமே பிடிக்கவில்லை "நீ ஒரு துணிக்கடை முதலாளியாகவாவது வருவாய் என்றல்லவா கனவு கண்டேன். போயும் போயும் பீடிக்கடையா வைக்கப் போகின்ருய்? பீடிக்கடை வைப்பது எமது குடும்ப கௌரவத்திற்கே இழுக்கு'' என்று கிழவர் வாய்விட்டுக் கூறினர். கிழவர் எத்தனை கூறியும் சத்தியராசு தன் எண்ணத்தை மாற்றிக்கொள்ளவில்லை.

# பீடிக்கடை

நாட்கள் பல உருண்டன. சத்தியராசுவுக்கு பீடிக்கடை நினைவு மாறவில்லை. அதே நினைவாகவே ஒருநாள் தெருவில் போய்க்கொண்டிருந்தார். ஒரு தாமிரக் காசை கண்டெடுத்தார். முகம் மலர்ந்தது. தாமிரக் காசைக் கண்டெடுத்தல் அதிர்ஷ்டத்தின் அறிகுறியாகும். தனலட்சுமி தன்னை நோக்கிவந்ததாகச் சத்தியராசு உணர்ந்தார். எடுத்த காசை இருகண்களிலும் ஒற்றிக்கொண்டார். பீடிக்கடை தொடங்குவதற்கு இது ஒரு நற்சகுனம் என முழுதாக நம்பினார், சட்டைப் பையில் காசைப் போட்டுக்கொண்டு செல்லும் வழியில் சில பையன்கள் மாபிள் விளையாடுவதைக் கண்டார். தானும் விளையாடினார். அதிர்ஷ்டவசமாக 5 ரூபா பெறுமதியான மாபிள்களை ஜெயித்தார். இவ்வெற்றிக்குக் காரணம் தாமிரக்காசுதான் என்பதை முற்றாக நம்பினார்.

வெற்றிக்களிப்போடு நேராகப் பீமேஸ்வரர் கோயிலுக்குச் சென்றார். பீமேஸ்வரர் சத்தியராசுவின் குலதெய்வம். தனது பீடிக்கடை நன்றாக நடைபெறவேண்டும் என உள்ளுர வேண்டுதல் செய்தார். அவ்வேண்டுதலைப் பெருமான் ஏற்றுக்கொள்ளுமுகமாகக் கோயில் மணியும் கேட்டது.

பீடிக்கடை ஆரம்பமானது. நல்ல வியாபாரம், கைநிறைந்த பணம், எதிராளியின் பீடிக்கடை மூடும் அளவிற்கு வியாபாரம் விரிவடைந்தது. பெற்ற லாபத்தை தாத்தாவிடமும் தாயிடமும் கொடுத்து மகிழ்ந்தார். ஒரு தடவை 450 ரூபாய்கள் சேமித்து தன் தாயார் கையில் கொடுத்து இருவளையல்கள் செய்து அணியுமாறு கேட்டுக்கொண்டார். தாயாரோ 50 ரூபாவை மாத்திரம் எடுத்துக்கொண்டு மீதியைத் தனது இரு குழந்தைகளின் கலியாணத்திற்காகச் சேர்க்க முற்பட்டார்,

சத்தியராசுவின் வியாபாரம் நாலே வருடங்களில் விரிவடைந்து வேரூன்றிவிட்டது. பாட்டனார் கண் ரணசிகிச்சை ஒன்றிற்காக அயலூர் சென்றிருந்தார். தாயும் உடன் சென்றிருந்தாள். சத்தியராசு தனியாகவே கடையைக் கவனித்துக்கொண்டு வீட்டிலிருந்தார்.

# தெய்வீகத் தொடர்பு

1949ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 7ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை ஏழு மணிக்கே வீட்டிலிருந்து தோழர்களுடன் கிளம்பி விளையாடிவிட்டு மத்தியானம் வீட்டிற்குத் திரும்பி யிருந்தார். தோழன் கங்கராஜு வீட்டிற்கு வந்து கோதா வரிக்குக் குளிக்கவருமாறு வற்புறுத்தி அழைத்துச் சென் ருன். ஆற்றங்கரையில் தோழர்களுடன் மறுபடியும் விளை யாட்டு நடந்தது. ஹோட்டல் ஒன்றில் சாப்பிட்டார்கள். அதன்பின்பே ஆற்றில் குளித்தனர். சில பையன்கள் பக் கத்திலுள்ள பனந்தோப்பிற்குச் சென்று பனம்பழம் பறித் தனர். சத்தியராசுவும் கங்கராசுவும் குளித்துவிட்டுப் பனந் தோப்பிற்கு வந்த பொழுது ஒரு பனைமரத்திலிருந்து தானுகவே சில பனம்பழங்கள் அவர்கள் முன்னுல் விழுந் தன. மற்றைய பையன்கள் ஓடிச் சென்று பொறுக்கி சத்திய ராசுவிடமும் கங்கராசுவிடமும் கொடுத்தார்கள்.

சத்தியராசு தனக்குக்கிடைத்த பழத்தைக் கடித்து அதன் சாற்றை உறிஞ்சமுற்பட்டார். திடீரென்று உடல் முழுவதும் நடுங்க ஆரம்பித்தது. பழத்தின் உள்ளிருந்து ஓங்காரநாதம் எழுந்தது. இந்த விநோத ஒலியைக் கேட் டதும் சத்தியராசு திடுக்கிட்டார். சில விஞடிகளுக்கெல் லாம் கோடி சூரியர் ஒன்று திரண்டு வந்தாற்போன்று பேரொளிப் பிழம்பு ஒன்று தோன்றியது, பனம்பழம் அந்த வெளிச்சத்தில் கலந்துவிட்டது. கணப்பொழுதில் பழம் சிவ லிங்கத்தின் உருவை அடைந்தது. லிங்கம் இரண்டாகப் பிளந்து ஏழடி உயரமுள்ள ஒரு ஆஜானுபாகுவான மனி தன் முன்னின்ருன். இந்த மனிதன் சத்தியராசுவை உட் காருமாறு பணித்தான். சத்தியராசு பயந்திருந்தும் தன் தைரியத்தை எல்லாம் கூட்டி ''நான் ஏன் உட்காரவேண் டும்'' என்று கேட்டான். பதிலுக்குக் காத்திராமல் உட் கார்ந்துவிட்டான். அந்த மனிதன் சத்தியராசுவைப் பத்மா சனத்தில் உட்காருமாறு பணித்தான், தனக்கு அந்த நிலை வராது என்று கூறவே, அந்த மனிதன் பத்மாசனம் போட்டு உட்கார்ந்து பத்த-பத்மாசன நிலையில் எப்படி உட்காருவது என்று காண்பித்தான். தன்னுடைய நடுவிர



12 வருட கடுந்தபஸ் பூர்த்தியானவுடன்.

At the completing of the 12 years Tapas.

අවුරුදු 12 හාමක තපස්විජ්‍යාත්‍යාති අන්තය කරා පැමිණීම.

னால் சத்தியராசுவின் இருபுறங்களுக்கு மத்தியில் தொட்டு தலையை மெதுவாகத்தட்டிக் கொடுத்தான். சத்தியராசு உடனே தன்னிலை இழந்தான்.

இதெல்லாம் நடந்தபொழுது பனம்பழம் சத்தியராசுவின் கையிலேயே இருந்தது. பழத்திலிருந்து சாறுவழிந்து முழங்கையெல்லாம் பரவியது. சத்தியராசு கண்ணை மூடிக்கொண்டிருப்பதைக் கண்ட தோழர்கள், சாதுபோல் நடிக்கிறான் எனக் கேலிசெய்தனர். தோழர்கள் அழைத்த குரலுக்குப் பதில் கொடுக்காமையால் சத்தியராசுவைப் பல விதத்திலும் தொந்தரவு செய்தார்கள்.

சத்தியராசுவுக்கு உணர்வு இல்லை. சத்தியராசு வியாபாரத்தில் முன்னேறி வருவதைக்கண்ட பையன்களில் சிலருக்குப் பொறாமை. தமது பொறாமையை இத்தருணத்தில் சிலர் வெளிப்படுத்தினார்கள். சிலர் சத்தியராசுவின் பத்மாசன நிலையைக்கலைக்க முற்பட்டார்கள், கையால் குத்தினர். உடலெல்லாம் பனங்களியைப் பூசினார்கள். சேற்றினால் அபிஷேகம் செய்தார்கள். ஆளைத் தூக்கிச் சென்று ஆற்றில் போட்டார்கள். சத்தியராசுவுக்கு உணர்வு வரவில்லை. இறந்துவிட்டார் என்றே பையன்கள் பயந்தார்கள், உடலைக்கழுவி மறுபடியும் கரையில் கொண்டுவந்து இருத்திவிட்டு, ஓடிச் சென்று உறவின் முறையினரிடம் செய்தி சொன்னார்கள்.

கிராமத்திலிருந்து ஆறேழுபேர் வந்தார்கள். அவர்களில் கோரார்மல்லண்ணா என்பவர் சத்தியராசுவின் பழைய வைரி. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பெரிய தடி ஒன்றினால் தனது வைரத்தைத் தீர்த்துக்கொண்டான். ஒரு அடி தவறுதலாக புருவமத்தியில் அந்த விநோத மனிதன் தொட்ட இடத்தில் விழுந்ததும் சத்தியராசு விழித்துக் கொண்டார். இருந்த இடத்தைவிட்டு எழுந்து பக்கத்தில் உள்ளவர்களிடம் ஒரு துண்டுத் துணியை தருமாறு கேட்டார். அவர்கள் கொடுத்ததும் அதைக்கோவணமாகத் தரித்துக்கொண்டு கால்சட்டையைக் கழற்றி வீசி எறிந்தார். சூழநின்றவர்கள் பல கேள்விகளைக் கேட்டனர்.

ஒன்றுக்குமே சத்தியராசு பதில் பேசவில்லை. அவர்களில் இருவர் அவரை மிகவேகமாக இழுத்துச் சென்று வீடு சேர்த்தனர்.

வீட்டு வாசலை அடைந்ததும் சத்தியராசு கால்களை அகட்டி அசையாது நின்றார். கால்கள் மரம்போல் விறைத்து விட்டன. சத்தியராசுவை வீட்டினுள்ளே கொண்டு செல்ல முடியவில்லை. வெளித் திண்ணையில் உட்கார வைத்தார்கள். ஏதோ துர்த்தேவதை தான் சத்தியராசுவை ஆட்டிவைக் கிறது என்றார்கள் சிலர். வேறு சிலர் ஏதோ வலிப்பு நோய் என்றனர். இன்னும் சிலர் ஏதோ மனித அறிவிற்கு அப்பாற்பட்டது என்றனர். பெத்த காமராசு என்ற ஹரி ஜன அறுபது வயதுக்கிழவர் மாத்திரம் சத்தியராசு ஒரு யோகியாக மாறி விட்டார் என்று கூறினார்.

சத்தியராசுவைப் பார்க்கக் கிராமமே திரண்டுவந்திருந் தது. உறவின் முறையினர் சிறிது பால் மாத்திரம் ஊட் டினர். இரவு ஆக ஆக கூட்டம் குறைந்தது, சத்தியராசு தனிமையில் விடப்பட்டார், ஆற்றங் கரையிலிருந்து ஓங் காரநாதம் தன்னை அழைப்பது போன்று சத்தியராசு உணர்ந்தார். இரவு 11 மணியளவில் முன்பு இருந்த இடத் திற்கே சென்று உட்கார்ந்தார்.

இரவு பலமாக மழை பெய்தது. மறுநாள் பிற்பகல் வரை ஓயாது பெய்து கொண்டே இருந்தது. சத்தியராசு வைத் தேடி ஊரவர்கள் மறுநாட்காலை வீடு வந்தனர். அங்கு காணாமையால் ஆற்றம் கரை சென்றனர் சத்திய ராசு மழையில் நனைந்தும் உணர்வற்றும் இருக்கக் கண்ட னர். அவரைத் தூக்கிச் சென்று ஆல மரத்தின் கீழ் இருத் தினர், மழையிலிருந்து பாதுகாக்க பனை ஓலையால் மேல் பகுதியை மறைப்புச் செய்தனர்.

இரவு 9 மணி இருக்கும் அவ்வழியால் சென்ற ஹரி ஜனச் சிறுவர் ஓங்கார நாதம் கேட்டனர். ஓடிச்சென்று கிராமமக்களிடம் கூறினர். கிராமமக்கள் திரண்டு வந்தனர். அவர்கள் வரும் போது ஓங்கார நாதம் கேட்டுக்கொண்டே இருந்தமையால் கிட்டவர அஞ்சினர். தூரத்திலேயே நின்று கொண்டு வேடிக்கை பார்த்தனர். முக்கால் மணி நேரம் ஓங்காரநாதம் நிகழ்ந்தது. ஓசை அடங்கியதும் சத்திய

ராசுவை நெருங்கித் தூக்கிக்கொண்டு வீடு சேர்ந்தனர். இரவு மாத்திரம் வீட்டில் தங்கி அதிகாலை மறுபடியும் இருந்த இடத்திற்கே சென்றுவிட்டார். கிராமத்து பெண் ஒருத்தி சத்தியராசுவின் முன்னுல் தேங்காய், பழம், புஷ்பம், ஊதுபத்தி வைத்து வணக்கம் செலுத்தினுள். மாலை 4½ மணி இருக்கும். கிராமத்தவர் வந்து ஆலமரத்தின் கீழ் பந்தல் ஒன்று அமைத்து அதில் இருக்குமாறு சத்திய ராசுவை வேண்டினர். சத்தியராசுவும் ஒப்புக்கொண்டு வந்து தங்கினுர்

அன்று மாலை ஐந்தரை மணி அளவில், தாயார் பர்வதம்மாவும் தாத்தா கோலிசத்தியமும் ஊர்வந்து சேர்ந்தனர். தன் தனயனின் நிலையைக் கேட்டு பர்வதம்மாள் அதிர்ச்சி அடைந்தாள். ஆலமரத்தின் கீழ் இருந்த சத்திய ராசுவின் நிலையைக் கண்டு பதறினுள். வீட்டுக்குத் திரும்பி விடுமாறு அழுது கதறி வேண்டினுள். கோலிசத்தியமோ குடும்பத்தின் தூண் என்று தான் நம்பியிருந்த பேரனின் மனமாறுதலால் ஏமாற்றம் அடைந்தார். பிள்ளை தாயாருடன் வாய் திறந்து பேசவில்லை. சைகைகளினுல் தான் வீடு திரும்ப முடியாது என்று காட்டிவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டுவிட்டார்.

இந்த நிலையைக் கண்ட கிராமத்தவர் சத்தியராசு ஒரு பாலயோகியாக மாறிவிட்டார் என்ற தீர்மானத்திற்கு வந்தனர். அவரது உணர்வற்ற நிலை, சமாதி நிலை, என உணர்ந்தனர். 14 வயது சிறுவன் ஒருவன் யோகியாக மாறுவது மிக அசாதாரணம் எனப் பேசிக்கொண்டனர்,

# பாலயோகியின் தவத்திற்கு இடையூறு

பாலயோகியைப்பற்றிய நல்லெண்ணம் கிராம மக்களிடையே பரவத்தொடங்கியது. அதனால் கிராம மக்கள் அவரை நல்வழியில் கவனிக்கவும் தொடங்கினர். யோகி பால் மட்டுமே அருந்தி வந்தார். மக்களுடைய நல்லாதரவைக்கண்ட கோரமல்லண்ணு பொறாமைகொண்டான். தான் பாலயோகிக்குப் பக்கத்திலிருந்து அவரை நன்கு கவனிப்பதாகக் கிராமமக்களுக்குக் கூறிக்கொண்டான். யோகி மௌன நிலையில் இருந்தபொழுதெல்லாம், இவருக்காகக் கிராமத்து மக்கள் வைத்துப்போன பால் பழம் எல்லாவற்றையும் தான் உண்டு தோலை மாத்திரம் யோகி முன்னால் வைப்பான். ஜனங்கள் யோகியார்தான் தாம்கொண்டு வந்த பழங்களை உண்டார் என்று நம்பினார்கள்.

பால் பழம் ஒன்றும் இல்லாமலே கடுந்தபசு செய்ய வேண்டுமென்று மல்லண்ணு யோகியாருக்கு புத்திமதி கூறினான். யோகியாரும் அதனை ஏற்றுக்கொண்டு பால் பழம் உண்ணுவதை நிறுத்திவிட்டார். பார்வதம்மா இதனைக் கண்டு பெருந் துயரடைந்தாள். பார்வதம்மாவைப் பால் கொண்டுவர வேண்டாமென்று கோரமல்லண்ணு நிறுத்திய பிறகு, தாயார் வந்து பார்த்தால் தவம் கெட்டுவிடும் என்று கூறித் தாயாரின் வருகைக்கும் தடைபோட்டுவிட்டான், யோகியாருக்கு இது தெரிந்தவுடன் உடல்வேதனையுடன் மனவேதனையும் அதிகரித்தது.

அவ்வூரில் டோரா வீரராசு என்றொருவர் வாழ்ந்து வந்தார். பாலயோகி ஒரு வேஷதாரி என்று எல்லோருக்கும் பறையடித்து வந்தார். இவருக்கு சூரண்ணு என்றொரு ஆயுர்வேத வைத்தியர் சினேகிதர். இருவரும் சேர்ந்து பாலயோகியின் வேஷத்தை வெளிப்படுத்த திட்டம் இட்டனர். ஒரு நாள் இரவு ஜனங்கள் தமது இருப்பிடங்களுக்குச் சென்றபின் இருவரும் யோகியார் இருக்குமிடத்திற்குத் தனியாகச் சென்றனர். யோகியாரின் யோகநிலையைக் கலைப்பதற்கு முயன்றனர். பத்மாசனநிலையைக் கலைக்க முயன்று



வயது 17ல் தபஸ் ஆரம்பித்து 5 வருடங்கள்.
At the age of 17. 5 years after the
commencement of the Tapas.
වයස 17 දී තපස් ආරම්භකර අවුරුදු 5.

கால்களை இழுத்தவுடன் அவைகள் இழுத்து நிருத்திய நிலை யிலேயே நின்றுவிட்டன. மூடிக்கிடந்த இமைகளை திறக்க முயன்று, விரலால் ஓர் இமையை தூக்கி பாதி திறந்த நிலையிலேயே கண் இருந்தது. சூரண்ணு பத்மாசன நிலை யைத் திரும்பவைக்சவும், கண் இமையை மூடிவிடவும் இரவு முழுவதும் முயன்றும் முடியவில்லை. யோகியாரை தகுதியற்ற முறையில் சோதித்ததைக் கிராம மக்கள் அறிந் தால் தன்மீது பகைகொள்வார்கள் என சூரண்ணு பயந் தார். யோகியாரின் பாதங்களைத் தொட்டு வணங்கி மன் னிக்குமாறு கேட்டுக்கொண்டார். யோகியாரும் புன்சிரிப் புடன் அவரை உடனே மன்னித்தார் சூரண்ணு உடனே தாயாரிடம் சென்று உங்கள் புத்திரன் உண்மையான மகாத்மா. அவரை நன்கு கவனித்துப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிச் சென்றார்.

தெய்வீக உணர்ச்சிக்குப் பிறகு இரண்டு மாதங்கள் தான் பாலயோகி ஆலமரத்தடியில் இருந்தார். அவருக்குக் கிடைக்கும் உபசரிப்புகளைக் கண்டு பலர் பொறாமை கொண்டு மேலும் தொல்லை கொடுக்கமுற்பட்டனர். சிலர் திருட்டுத்தனமாக வந்து அவரை அடித்தார்கள். ஒருநாள் மண்ணெண்ணையில் துணியை நனைத்து தீப்பற்றவைத்து யோகியின் இடது கால்மேல் வீசிவிட்டனர். நெருப்புச் சுட்ட வடுவை இன்றும் யோகியாரின் காலில் பார்க்க லாம்.

# புதிய ஆச்சிரமத்தில் ஒரு நாள்

கஷ்டங்கள் மேற்பட மேற்பட இடத்தை மாற்ற வேண்டுமென்று யோகியார் விரும்பினர். பசவபுடி என்பது பக்கத்திலே உள்ள ஒரு கிராமம் அங்கு ஒருஆச்சிரமம். அதில் ஒரு சாது வாழ்ந்துவந்தார். அவரை நாடி யோகியார் சென்றார். தவத்தின்போது மக்களால் தனக்குக் கிடைத்த கஷ்டங்களையெல்லாம் கூறி ஆச்சிரமத்தில் தங்க அனுமதி கோரினார். சாது யோகியைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தார். எந்தவிதமான சாதனை செய்கிறீர் என யோகியாரைச் சாது கேட்டார் 'எனக்குத் தெரியாது' என யோகி கூறினர்.சாது 'நான் உனக்கு ஒரு மந்திரம் உபதேசிக்கிறேன்' அதனை ஜெபம் செய்துவா என்று கூறி 'சத்குரு' என்ற மந்திரத்தை உபதேசித்தார் அடுத்தநாட்காலை மந்திரத்தை உச்சாடனம் செய்தாயா என்று சாது கேட்டார் இல்லை என்ற பதில் யோகியாரிடமிருந்து கிடைத்தது. இம் மறுமொழி சாதுவின் பொறுமையை இழக்கச்செய்தது. 'உனது வழமையான சாப்பாடு என்ன'? என்று சாது கேட்டார். பால் என்றார் பாலயோகி. இந்த ஆச்சிரமத்தில் பால் கிடைக்காது ஆனபடியினால் இங்கு தங்க இயலாது என்று சாது கூறிவிட்டார்.

# பழைய ஆலமரத்தடியில் மீண்டும் தவம்

பழைய ஆலமரத்தடிக்கே யோகி திரும்பி வந்து தவத்தை மேற்கொண்டார். காலம் உருண்டோடியது. 1945ம் ஆண்டு நவம்பர் மாதம் ஓர் இரவு 2.30 மணிக்கு ஓர் கொடும்புயல் பெருமழையுடன் கூடி வீசி காலை ஐந்தரை மணிவரை பெருத்த நாசம் விளைத்தது. பெரு மரங்கள் வேரோடு சாய்ந்தன. வீடுகள் வீழ்ந்தன. மகன் நிலை எப்படியோ என்று ஏங்கிய தாயார் மகனை சென்று பார்த்தார். ஆலமரத்தின் கீழ் யோகியார் சாந்தமாகத் தவநிலையில் இருக்கக் காணப்பட்டார். ஆழமரத்திலிருந்து ஒரு இலை அசையவில்லை. நிலத்தில் விழவும் இல்லை. செவ் வெறும்பு மாத்திரம் அவரது உடலை மொய்த்திருந்தன, அதனைக்கண்ட தாயார் அவற்றை அகற்ற முயன்றார். யோகி அவ்விதம் செய்யவேண்டாம் என்று தடுத்தார்.

# இடுகாட்டில் கடுந்தபசு

யோகசாதனைகள் ஆலமரத்தடியில் நிகழ்ந்து வந்தாலும் பாலயோகிக்கு நிலைத்திருப்பது கடினமாகவே தோன்றியது. 1949 நவம்பர் மீ 18ம் திகதி ஆலமரத்தைவிட்டு கிளம்பி கிராம எல்லையில் இருந்த இடுகாட்டைச் சரண் அடைந்தார். விஷமக்காரச் சிறுவர்கள் பயந்து அங்கு செல்வதில்லை இடுகாட்டின் அமைதி தவ வாழ்வுக்குச் சாதகமாகவே அமைந்தது, ஆனால் பூச்சிகள், கொசுக்களின் உபத்திரவம் தாங்க முடியவில்லை. பல மணிநேரம் யோகியார் அசையாது இருப்பதனால் பலவிஷ ஜெந்துக்கள் அவரை உயிரற்ற பொருள் என நினைத்து கடித்துத் தின்னத் தொடங்கின. பல பாம்புகள் கடித்து வலியுண்டாக்கின. யாரும் கவனிக்காத பொழுது யோகி நள்ளிரவில் ஆற்றிற்குச் சென்று குளித்துவருவது வழக்கம். உடல் முழுவதும் பூச்சிகளால் கடியுண்ட புண், குளிக்கும் பொழுது மீன்கள் அப்புண்களைக் குத்தின. சில சந்தர்ப்பங்களில் உடல் முழுவதை யுமே எறும்புகள் மொய்த்திருக்கும்.

ஒருநாள் இரவில் அவருடைய வழக்கமான நள்ளிரவுக் குளியலுக்காக யோகி சென்று கொண்டிருந்த பொழுது ஒரு விஷப்பாம்பு அவருடைய காலில் கடித்துவிட்டது, அதைக் கவனியாது சென்று குளித்துவிட்டுத் திரும்பினார். விஷம் தேகம் முழுதும் பரவ நீல நிறம் அடைந்தது. வலி சகிக்க முடியாது உடல் முழுதும் எரிச்சல் எடுத்தது. இந்த நிலையில் பாலயோகி அழ ஆரம்பித்தார். அப்பொழுது அவருக்கு வயது பதினைன்கு ஆகியிருந்தது. இந்த அதிசய வாழ்க்கை ஆரம்பித்து நான்கே மாதங்கள் மாத்திரம் ஆகியிருந்தன. யோக வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளிவைத்திட்டு வீடுதிரும்பி விடலாமா என்று யோசித்தான். வீடுதிரும்பி மற்றவர் களைப்போன்ற வாழ்க்கையை ஆரம்பித்தால் என்ன? என்று மனம் பேதலித்தது. யோகவாழ்வை அவனாக நாடி ஆரம்பிக்கவில்லை. அவனையும் அறியாத சக்தி ஒன்றல்லவோ ஆட்கொண்டது.



வயது 15ல் தபஸ் ஆரம்பித்து 3 வருடங்கள்

At the age of 15. 3 years after
the commencement of the Tapas.

වයස 15 දී තපස් ආරම්භකර අවුරුදු 8.

இந்த இக்கட்டான நிலையில் யோகியை ஆட்கொண்ட யோகபுருஷர் யோகிமுன் தோன்றினார், வீட்டுக்குத் திரும்பாமல், தொடர்ந்து யோகவாழ்வில் இருக்கப்பணித்தார். யோகவாழ்வில் தேர்ந்தவனாக, யோகப் பிரதிஷ்டனாக. வீடு திரும்புவதற்கு அல்லாமல் யோக மார்க்கத்திலேயே தன் வாழ்வை அர்ப்பணித்துக்கொள்ள யோகியார் தீர்மானித்தார். உடலிலுள்ள வேதனையும் நீங்கிவிட்டது.

இந்நிகழ்ச்சியும் அற்புதமானதென்றே கொள்ளவேண்டும். தேகவேதனை பொறுக்கமுடியாமல் இருந்த யோகிக்கு எதிர்பாராத இடத்திலிருந்து உதவி கிடைத்தது. தக்க சமயத்தில் தோன்றிய யோக புருஷர் தைரியம் ஊட்டியதோடு, தேக உபாதைகளை குறைத்ததற்கான மந்திர உபதேசமும் செய்தார். மந்திரத்தை ஜபிக்க, ஜபிக்க உடம்பின் விஷவேகம் தணிந்து வந்தது.

இடுகாட்டில் சர்ப்பம் தீண்டிய தாலுண்டான விஷம் பாலயோகியைச் சிறிதும் தாக்கவில்லை என்ற செய்தி ஊர் முழுவதும் பரவியது இச் செய்தியை கிழக்கு கோதாவரி ஜில்லா அதிகாரியும் அறிந்தார். இவர் சமயப் பற்றுடையவர். ஆத்மீக சாதனைகளில் ஈடுபட்டவர். பாலயோகியைக் காண அவாக்கொண்டு வந்தார். பாலயோகி வெறுமனே கட்டாந்தரையிலே இருக்கக் கண்டார். மனிதனுடைய தேகசக்தியைப் பூமி இழுத்து விடுகிறது. ஆதலினால் தாம் இருந்து தவம் செய்வதற்கு மான்தோலோ அன்றிப் புலித்தோலோ ஒன்று அனுப்பிவைக்குமாறு யோகியார் அதிகாரியிடம் கேட்டார். அதிகாரி மறுநாளே இராமச்சந்திரபுரம் தாசில்தார் நரசிம்ம மூர்த்தி மூலமாகப் புலித்தோல் ஒன்று அனுப்பி வைத்தார். யோகியார் இருந்த இடம் ஈரமாக இருந்ததால் அதில் தோலைப் போட்டு உட்கார்ந்தால் மணம் வீசும் என்றறிந்த நரசிம்மமூர்த்தி பலகை ஒன்று எடுப்பித்து அதன் மேல் தோலைப் போட்டு உட்காரச் செய்தார். அந்த மரமேடைக்கு மேல் பனை ஓலையினாலான பந்தல் ஒன்றையும் அமைக்கச் செய்தார். இவையெல்லாம் யோகியின் தவத்திற்கு அநுசரணையாக அமைந்தது.

ஜில்லாக் கலெக்டருக்குவேலை மாற்றம் கிடைத்த பொழுது, யோகியாரைக் காண வந்திருந்தார். அவருடன்

அவருடைய உதவியாளர் சத்தியநாராயணராவ் அவர்களும் வந்திருந்தயர். ராவுக்கும் பாலயோகியிடம் பெரும் பக்தி ஏற்பட்டிருந்தது. அடுத்த நாளே தாசில்தார் நரசிம்ம மூர்த்தியைப் பார்த்து பாலயோகிக்கு ஒரு சிறு கோயில் கட்டிக்கொடுக்கும் விஷயமாக ஆலோசித்தார். சுடுகாட்டுக்குப் பக்கத்தில் இருந்த ஜமீந்தாரின் நிலத்தில் கோயில் கட்டுவதாக தீர்மானிக்கப்பட்டது.

அவர்களுடைய ஆசைப்படி 1950 ஒக்டோபர் மாதத்திற்குள் 12க்கு 12 என்ற அளவில் கோயில் ஒன்று கட்டி முடிக்கப்பட்டது. கோயில் கட்டி முடிந்தும் கோயிலுக்குள் மரமேடையமைத்து பாலயோகியை ஆசனம் கலையாமல் அதன் மேல் தூக்கி வந்து உட்கார்த்தி விட்டனர், அக்காலத்தில் யோகியர்ர் தன் கால் கை உபயோகிக்கும் சக்தியை இழந்திருந்தார். நடக்கவும் முடியாது. கால்களும் கைகளும் மரத்துப்போயிருந்தன, பால் தவிர வேறெதுவும் உண்பதில்லை. பாலயோகியின் நிஷ்டைக்கு யாதொரு இடையூறும் நிகழாவண்ணம் கோயில் கதவைப் பூட்டி சாவியை யோகியின் தாயாரிடம் கொடுத்துவிட்டார்கள்.

# தபஸ் வீஜி மகராஜ் சந்திப்பு

காகிநாடாவில், பித்தாபுரம் சாலைக்கருகில், விஷ்ணு சேவாஸ்ரம் என்ற ஆச்சிரமத்தில் தபஸ் வீஜி மகாராஜ் என்ற மகான் இருந்தார். வட நாட்டவர்; ஒழுக்கசீலர்: பாடியாலா ராஜ குடும்பத்தில் அவதரித்தவர். ஐந்து வயதிலேயே வானப் பிரஸ்தாச்சிரமம் அடைந்து உதாசி மரபுப்படி சந்நியாசம் வாங்கிக்கொண்டு இமாலயத்தில் பல்லாண்டுகள் தவம் செய்து சவசித்தி அடைந்தவர். 12 வருட காலம் மௌனம் அனுஷ்டித்து முதலில் காடேஷ்வரி தபசும் பின்பு பஞ்ஜாக்கினி தபசும் 12 வருட காலம் செய்தவர் கங்காநதிக் கரையில் ரிஷிகேஷத்தில் 2 வருடங்களுக்கு வேறு தபசும் செய்தவர். இயற்கைக்கு அப்பாலான காய கல்ப சிகிச்சை தனது வாழ்வின் 90வது 120 ஆவது 150 ஆவது வயதுகளில் செய்து கொண்டு 187 வருடங்கள் வாழ்ந்தார். சந்நியாஸ்ரமத்தில் "வீஷ்ணு தாமர்" என்ற நாமம் தரித்தார். மக்கள் தங்கள் ஆழ்ந்த மரியாதையின் வழி அவரை 'தபஸ்வி மகராஜ்' என்றே அழைத்தனர். அவருக்குப் பங்ளூரில் நந்தி குன்றுகள் பக்கலிலும் காகிநாடாவிலும் ஆச்சிரமங்கள் இருந்தன. தெற்கே அவர் பவனிவரும்போது இவ்விரு ஆச்சிரமங்களில் தங்கினர். 1955 அக்டோபர் 12ல் ஜான்சியில் அவர் மகாசமாதி அடைந்தார்.

ஒரு தடவை, இவர் காகிநாடா ஆச்சிரமத்தில் தங்கியிருந்தபோது, பாலயோகியைப்பற்றிக் கேள்வியுற்று அவரைக் காண அவாக்கொண்டார். அப்பொழுது அவருக்கு வயது 180 பாலயோகிக்கோ 16. 1951 ஜனவரியில் காங்கிரஸ் சேவகர் புலுசு சாம்பமூர்த்தியுடன் பாலயோகியைத் தரிசிக்க வந்தார். பாலயோகி ஆழ்ந்த சமாதியில் இருந்ததால் தபஸ்வீஜி வந்திருந்ததை அறிந்துகொள்ள முடியவில்லை. தபஸ்வீஜீ மகராஜ் பாலயோகியைக் கண்டவுடனேயே அவரது ஆத்ம ஆன்மீக நிலையைத் தெரிந்து கொண்டுவிட்டார், கைகூப்பிப் பாலயோகிக்கு வணக்கம் செலுத்தினர். புஷ்பங்கள் கொண்டுவரச் செய்து யோகியின் பாதங்களில் வைத்தார். அரைமணி நேரம் பாலயோகியின் முன்னிருந்துவிட்டு காகிநாடா

திரும்பினர் இந்த முதல் சந்திப்பின்போது தபஸ் வீஜியின் ஒரு சிஸ்யரும் கூட இருந்தார்.

இந்த நிகழ்ச்சியின் பின்பு தபஸ் வீஜி அடிக்கடி பாலயோகியை தரிசிக்க வந்தார். பாலயோகி எப்பொழுதும் சமாதியிலேயே இருந்ததால் இருவரும் பேசிக்சொள்ள முடியவில்லை. ஒரு முறை பாலயோகி சமாதியிலிருந்து விழித்துக்கொண்டபொழுது தபஸ் வீஜி பலமுறை தரிசனைக்கு வந்ததைக் கூறினர். யோகியும் அவருக்கு தரிசனை கொடுக்க இசைந்தார். தபஸ் வீஜி செய்தி கேள்விப்பட்டதும் உடனே வந்தார். இருவரும் பேசிக்கொண்டனர்.

இருவரதும் சந்திப்பு தனித்தன்மை வாய்ந்தது. இச்சந்திப்பு இருவரதும் பூர்வீகத் தொடர்புகளினலேயே ஏற்பட்டதெனலாம். யோகியோ தெலுங்கு தவிர வேறு எந்த மொழியும் அறியாதவர் தெலுங்கில்தான் பேசினர். தபஸ் வீஜியின் மொழியோ ஹிந்தி தெலுங்கு அறியாதவர் ஆனல் ஒருவரை ஒருவர் பூரணமாகப் புரிந்து கொண்டனா. ஒரு ஆத்மா இன்னொரு ஆத்மாவைப் புரிந்து கொண்டது. பாலயோகி யோக வாழ்க்கைக்குப் புதியவர். யோக சாதனையில் இடர் பாடுகளை அனுபவித்துக் கொண்டிருந்தார். தபஸ் வீஜியோ தவசித்தி பெற்றவர். யோகவாழ்க்கையின் கஷ்டங்களை அறிந்தவர். இடர்பாடுகளுக்கு மாற்றுகள் சொன்னர்.

ஒருமுறை தபஸ்வீஜி பெங்களூரில் நந்திமலையில் இருந்தார். பாலயோகி சாதனையிலீடுபட்டிருந்த போது உடலெல்லாம் திடீரென்று எரிச்சல் எடுத்து பெரிதும் துன்பம் அனுபவித்தார். தபஸ்வீஜி இதனைத் தமது ஞானதிருஷ்டியால் அறிந்து அவரது உடல் எரிச்சல் நீக்கத்தக்கதான எண்ணெய் ஒன்றைத் தயாரித்துக் கொண்டு சென்று நேரில் கொடுத்தார்.

அந்த எண்ணெயை யோகியின் உடம்பில் அவர் தேய்த்த உடனே எரிச்சல் அடங்கிவிட்டது. விறைத்திருந்த கால் கைகளும் அசைக்கக் கூடியனவாக அமைந்தன. யோகியின் உடம்பிலிருந்து வந்த துர்நாற்றமும் இந்த எண்ணெயின் சக்தியால் மறைந்தது. வெறுப்பினல் யாரோ யோகியின் மேல் கெட்ட மந்திர சக்தியை ஏவி விட்டிருந்தார்கள் என்றும் இதனல்தான் யோகி இந்த உபாதைகளை அனுபவிக்க வேண்டி வந்ததென்றும் தபஸ் வீஜி விவரித்தார்.



ஸ்ரீ சிவபாலயோகி மகராஜ் அவர்களால் நர்மதா நதியில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கம் நூரளை ஆஸ்ரமத்தில் இந்த லிங்கத்தை சுவாமிகள் ஸ்தாபனம் செய்வார்,

தேகத்தில் உபாதை கூடும் சமயங்களில் தாம் உண்டு வந்த சிறிதளவான பாலையும் நிராகரித்துவிட்டு உண்ணு விரதமிருந்து தன் தவத்தைக் கடுமையாக்கிக் கொண்டிருந்தார். இதனால் தேக உபாதை மேலும் அதிகரித்தது. இதனை அறிந்த தபஸ் வீஜி, யோகியார் தினமும் ஓரளவு பால் தவறாது அருந்தி வரவேண்டும் என்று கண்டிப்பாக பணித்தார். தபஸ் வீஜீ தாமே ஒரு பசுவை வாங்கி யோகியாரின் தாயாரிடம் கொடுத்து தவறாமல் பால் வழங்க ஏற்பாடு செய்தார்.

1951ம் வருடம் கார்த்திகை மாதம் பௌர்ணமி அன்று யோகியாருக்கு தபஸ்வீஜியின் மந்திரோபதேசம் கிடைத்தது. மந்திர ஜெபத்தினாலும் தபஸ்வீஜியின் மருந்தெண்ணெயின் பலத்தினாலும், விறைப்புற்றிருந்த யோகியாரின் கை விரல்களை அசைக்க முடிந்தது. அவருடைய கால்கள் அவருக்கு உபயோகமற்றிருந்தன. கால் வழங்காமையினால் பல நாட்கள் இரவுக் குளியலை நிறுத்தியிருந்தார். இது பெரும் அசௌகரியமாக இருந்தது. ஓர் இரவு அந்த தெய்வீக புருஷர் திடீரென யோகி முன் தோன்றி யோகியாரின் கால்களைக் கைகளினால் தடவி விட்டார், உடனேயே கால்கள் அவருக்கு வசமாகி விட்டன. தவம் செய்த கோயில் குடீரத்தில் காற்றுக்கான ஜன்னல்கள் இருக்கவில்லை. அதனால் உஷ்ண காலத்தில் தவம் தடைப்பட்டது. தபஸ்வீஜியின் ஆலோசனைப்படி கோயில் குடிலின் மேல் ஸ்தூபம் போன்ற கோபுரம் அமைக்கப்பட்டது.

1955ம் ஆண்டு ஒக்ரோபர் 12ம் திகதி தபஸ்வீஜி மகா சமாதி அடைந்தார் அத்தருணத்தில் யோகியாரின் தவம் முற்றுப் பெறாமலேயே இருந்தது. யோகியார் 1963ல் பங்களூர் செல்வதற்கு முன்னால் காகினடா சென்று தபஸ்வீஜியின் ஆச்சிரமத்தில் நான்கு நாட்கள் தங்கினார். தபஸ்வீஜியின் தொடர்பினால் பாலயோகியாருக்கு உலகில் நல்ல மதிப்பும் கிடைத்தது. யோகியார் 12 ஆண்டுகள் இடையறாது செய்த தவம் 1949 ஆகஸ்ட் 7ம் திகதி முடிந்தது.

12 ஆண்டுகள் இடைவிடாமல் தவம் செய்தல் யோக தபஸ் எனப்படும். யோகசாஸ்திரத்தின்படி 12 வருடங்கள் ஒரு யுகம் அல்லது பருவம் எனப்படும். ஒவ்வொரு திக்கையும் நோக்கி நின்று புரியும் தவம் முடிவடைந்தால் அது "திக் சித்தி" என்று சொல்லப்படும். ஒவ்வொரு திக்கையும் நோக்கி நின்று தவம் செய்யும் பொழுது உரிய திக்குக்காக ஏற்பட்ட மந்திரத்தை உரிய முறையில செபம் செய்தல் வேண்டும். திக் சித்தி அடையும் ஒருவர் யுக தட்சை முடித்தாரானால் அவர் 'ரிஷி' எனப்படுவார்.

# தவசித்தி

1953 ஒக்ரோபர் 23ம் தேதிவரை நான்கு வருடங்களுக்கு கிழக்கு நோக்கியே தவம் நடந்தது. அன்று தியான மூர்த்தியின் கட்டளைப்படி வடக்கு நோக்கித் தவத்தைத் தொடங்கினர். அன்று தொடக்கம் பூரண மௌனம் அனுஷ்டித்தார். ஒரு நாள் இரவு யோகியார் குளிக்கச் சென்ற போது காலில் பாம்பு ஒன்று சுற்றித் தீண்டியும் விட்டது. தைரியத்தோடு, சுற்றிய பாம்பைக் கழற்றி எறிந்துவிட்டுக் குளிக்கச் சென்ருர். இரண்டு வருடங்களுக்குத் தவம் இடைவிடாது நடைபெற்றது. கடைசி நாள் அன்று தியான மூர்த்தி அவர் முன் தோன்றி வடக்கு நோக்கி நின்று இன்னும் ஆறுநாளைச் சாதனை செய்யுமாறு பணித்து மறைந்தார்.

1955 ஆகஸ்ட் 7ம் திகதி மேற்கு நோக்கித் தவம் ஆரம்பமாகியது. மேற்கு நோக்கிய தவம் மிகமிகக் கடுமை யானது என்பது பரமசாதுக்களின் அபிப்பிராயமாகும். இக் காலத்தில் யோகியாருக்குச் சோதனைகள் அதிகமானதால் தம்மைக் குடிலில் வைத்துப் பூட்டிவிடுமாறு தன்னைச் சேர்ந்தவர்களிடம் கேட்டுக்கொண்டார். பக்தர்கள் மாதம் ஒருமுறைதான் சந்திக்கச் சம்மதம் கொடுத்தார், உள்ளத்திலும் அமைதி தோன்றவில்லை. உடல் எல்லாம் பற்றி எரிவது போன்ற ஒரு உணர்வையும் பெற்ருர்.

1955 அக்டோபர் 12ம் திகதி யோகி இரவு நேரத்தில் குளிக்க கோயில் குடிலினின்று வெளிவந்தபோது வாயிலில் கிடந்த சர்ப்பம் ஒன்று கடித்தது. குளித்துவிட்டு திரும்பி வரும்போது மறுபடியும் சர்ப்பம் கோபங்கொண்டு கடித்தது. இதனுல் மூன்று நாட்கள் நினைவிழந்த நிலையிலேயே கிடந்தார். நான்காவது நாள் இஷ்ட தெய்வம் அவர்முன் வந்து அவரை எழுப்பிவிட்டது. விழித்தெழுந்ததும் யோகிக்குத் தாங்கமுடியாத வலி இருந்தது ஜான்சியில் அன்று தான் தபஸ்வீஜீ சித்தி அடைந்து கொண்டிருந்தார்.

1956 ஜூ மாதம் மேற்குத் திக்குச் சித்திக்காக தவம் தொடங்கி ஒன்பது மாதங்கள் ஆகியிருந்தன. ஏழு நாட்களாக யோகி தந்நிலை மறந்து சமாதியில் ஆழ்ந்திருந்தார். மேற்கு நோக்கிச் செய்த தவம் 1956 யூன் மீ 25ம் திகதி கெடு நீங்கியது. அன்றே தெற்கு நோக்கிய தவமும் ஆரம்பமானது. இதன் பின்பு மனம் நந்நிலையில் இயங்கத்தொடங்கியது. உடல் நிலையும் குணமாகியது. சந்தோஷ நிலை பெற்றார், தெற்கு நோக்கி ஒரு வருடமும் 3 மாதங்களும தவம் செய்தார். 1957 மே மாதம் தெற்கு நோக்கிய தவம் முடிவுற்றது. ஆனால் 12 வருடம் தவம் பூர்த்தியாகவில்லை. இன்னும் 3 மாதங்களுக்கு கிழக்கு நோக்கியிருந்து தவம் செய்து 1961 ஆகஸ்ட் 7ம் திகதி திங்கட்கிழமை தவத்தைப் பூர்த்தி செய்து கொண்டார். இப்பொழுது அவர் தவம் நிறைந்த முனிவர். ஸ்ரீ சிவபால யோகியாகத் திகழ்ந்தார்.

12 ஆண்டுகளும் நடைபெற்ற தவ சாதனை கசப்பானவையும் பயங்கரமானவையுமாகும். தவத்தின் வேகம் அதிகரிக்க அதிகரிக்கச் சோதனைகளும் கூடியேவந்தன. யோகமுத்திரையிலிருக்க யோகி தன் இரு கைகளையும் கோர்த்து வைத்துக்கொள்ளவேண்டியிருந்தது. நகங்கள் வளர்ந்து மாமிசத்தை துளைத்தன. விரல்கள் மரத்துப் போய் விறைத்திருந்த படியினால் தனித்தனியே பிரிக்க முடியாமல் போய்விட்டன. மயிர்க்கால்களினூடாக இரத்தம் வியர்வைத் துளிகள் போலக் கசிந்தன. உடம்பெல்லாம் கொப்புளங்கள் இருந்தமையினால் யோகி உண்ணாவிரதம் இருந்தார். 1961 ஜனவரியிலிருந்து 1961 ஆகஸ்ட் 7ம் திகதி வரை பூரண உபவாசம் இருந்தார். ஆகஸ்ட் 6ம் திகதி மாலை 7 மணிக்கு யோகி அமைதிமிக்க உயர் பேருவகை கொண்ட சமாதி நிலை அடைந்தார். இந்த நேரத்தில்தான் யோகிக்குத் தியானமூர்த்தியைப் பரிபூரணமாக உணர்ந்து கொள்ள முடிந்தது. மறுநாள் காலை சுமார் 2 மணி அளவில் சமாதியினின்று மீண்டார். இந்த நிமிடத்தில்தான் பார்வதி பரமேஸ்வரர் யோகியின் உடம்பில் லயித்துக் கலந்த உணர்வு ஸ்ரீ சிவபால யோகிக்கு ஏற்பட்டது. அவர் அர்த்தநாரீஸ்வரராகப் பலருக்குத் தென்பட்டார் யோகியார் தவம் செய்து வந்த கோயில் குடிலின் சிகரம் பேரொளிப் பிளம்பாக விளங்கி நின்றதை அவரது பக்தர்கள் பலர் கண்டு அனுபவித்தனர்.

12 வருட தவம் முடிந்த நாள் காலை 8 மணிக்கு யோகி இனிமையான குரலில் ஓங்காரத்தைப் பாடி தன் மௌனத்தைக் கலைத்தார். அவருடைய தரிசனத்திற்காகக் கூடியிருந்த பெருங் கூட்டத்தினருக்கு குடில்கோயிலின் கதவுகள் திறந்துவிடப்பட்டன. உடல் மெலிந்திருந்தாலும் முக விலாசம் பளபளப்புடையதாக இருந்தது. பக்கத்துக் கிராமங்களிலிருந்தும் தொலை தூரத்திலிருந்தும் 3 லட்சத்திற்கு அதிகமான மக்கள் யோகியைத் தரிசிக்கக் கூடியிருந்தனர். பிற்பகல் 3 மணிக்கு யோகி சில வார்த்தைகள் மக்களுக்கு ஒரு செய்திபோலவே பேசினார்.

'சூரியனையே வென்று விடுவோம் என்று சொல்வது முட்டாள்தனம். இது உலகத்திற்கு நன்மை பயக்காது. ஒருவர் சமாதி நிலையில் சூரியனையே அடைந்து உயிரோட திரும்ப முடியும் என்பது சிரமசாத்தியமில்லை என்பது என்னுடைய சொந்த அனுபவம் இதைத்தெரிய ஜனங்கள் தியானம் செய்து தங்களையே புரிந்து கொள்ளவேண்டும். இதுவே உலகிற்கு அமைதியைக் கொண்டுவரும்.'

TO KNOW THE SECRETS OF SECREDNESS
OF HINDU RELIGION READ

# " ARUTKURAL "

*Srikanthaluxumy. A*
*11/21, Inuvil West*
*Chunnakam*

*Editor & Publisher: R. K. Murugesu, Jaya Gayathri Publication, 21, Coopers Hill; Colombo-3. Printed by JAYA GAYATHRI PRINTING PRESS, 20/C, Hulftsdorp*